வீட்டு பாவனைத் தேவை
மற்றும்
ரெடிமேட் உடைத்
தேவைகளை செய்ய நாடுங்கள்

யோகாமணி
ஆடை அகம்

88, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

உங்கள் ஆடைத் தேவைகளை
விரைவாக பூர்த்தி
செய்கிறோம்

யோகாமணி
ஆடை அகம்

88, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 22 புதன்கிழமை (06 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 220

### கட்டுவன்புலத்தில் ஷெல் வீச்சில் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 5.30 மணிக்கு தெல்லிப்பழைப் பகுதியை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தின் போது தெல்லிப்பழை கட்டுவன்புலம் பகுதியில் விழுந்த ஷெல்லினால் ஒருவர் காயமடைந்தார்.

தெல்லிப்பழையில் இருந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அரசியல் நிலையை தெளிவுபடுத்துகிறார் பாலசிங்கம்

# நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்கள் முடிவடையும் வரை பேச்சுக்கு இடம் இல்லை

## தமிழீழம் எங்கும் கரும்புலிகள் நாள் நேற்று எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

தமிழினத்தின் விடிவுக்காக தம்மையே தற்கொடை செய்த கரும்புலிகளின் நினைவு நாள் நேற்று உணர்வுபூர்வமாகவும், எழுச்சியுடனும் தமிழீழமெங்கும் கொண்டாடப்பட்டது.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு — யாழ். செயலகம் உட்பட ஏனைய திணைக்கள அலுவலகங்களிலும் — கல்விப் பாடசாலைகளிலும் — வர்த்தக மற்றும் பொது அமைப்பு நிறுவனங்கள், சன சமூக நிலையங்கள், ப.நோ.கூ. சங்கங்களிலும் — விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் மற்றும் பாசறைகளிலும் —

தேசியக்கொடியேற்றலுடன் கரும்புலிகள் நாள் உணர்வுபூர்வமாக ஆரம்பமானது.

கரும்புலிகள் நினைவு நாள் நிகழ்வுகளில் மக்கள் பெருமெடுப்பில் பங்கேற்றனர்.

சந்திகளிலும், பொது இடங்களிலும் அமைக்கப்பட்ட விசேட பந்தல்களில் வைக்கப்பட்டிருந்த 27 கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கும் மக்கள் திரண்டு மலர்தூவி கண்கலங்கிய நிலையில் தமது அஞ்சலியைச் செலுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த காலங்களிலும் பார்க்க இம்முறை கரும்புலிகள் நினைவு நாளை தமிழீழ மக்கள் உணர்வுபூர்வமாக அனுஷ்டித்ததை அவதானிக்க முடிந்தது.

தமிழீழப் பகுதிகளில் வீதிகள் எங்கும் நேற்று மஞ்சள், சிவப்புக் கொடிகளும், கரும்புலிகளின் தியாகத்தை விதந்துரைக்கும் பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன.

அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன. சந்திகளில் ஒலிபெருக்கி மூலம் எழுச்சிப் பாடல்கள் ஒலித்தன.

அரச ஊழியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கறுப்புப்பட்டி அணிந்து தமது அஞ்சலியை வெளிப்படுத்தினர்.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றில் கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும், கூட்டங்களும் நேற்று இடம்பெற்றன.

பல இடங்களிலும் கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் அமைக்கப்பட்ட அலங்கார ஊர்திகள் பவனிவந்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனால் சமாதான கதவுகளை மூடவில்லை என்றும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

சமாதானம், பேச்சுவார்த்தைக்கு இப்போதும் நாம் தயார்.

ஆனால் நாடாளுமன்றத் தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் நடந்து முடியும் வரை யாருடனும் பேசுவதற்கு நாம் தயாரில்லை என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறோம்.

இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

நேற்று இரவு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவு நாள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சில சமயங்களில் முற்போக்கான ஆட்சி ஒன்று அங்கு வரலாம்; யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து புலிகளுடன் பேசுவதற்கு தயாரான ஒரு சக்தி அங்கு ஆட்சிக்கு வரக்கூடும்.

''அப்படி வந்தால் அந்த சக்தியுடன் நாமும் பேசுவதற்குத் தயார்.

'புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எம்முடன் பேச விரும்பினால் நாமும் அதற்கு தயார்.

''சமாதானத்தின் கதவுகளை நாம் மூடப் போவதேயில்லை.

''ஆனால் எங்களுடன் பேசாமல் யுத்தத்தைத் தொடர்வது என்று புதிய அரசாங்கம் தீர்மானித்தால் அவர்கள் ஒரு பெரிய வரலாற்றுத்தவறை இழைத்தவர்கள் ஆவார்கள்.

''அப்படி சமாதானத்தின் கதவுகளை சிங்கள அரசு மூடுமானால் தமக்கு தன்னாட்சி முறை — தனியரசை — ஏற்படுத்துவதைத் தவிர தமிழருக்கு வேறு வழியில்லை.''

— இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர் தனது கரும்புலித் தாக்குதலை நடத்திய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இந்தக் கூட்டம்



அன்ரன் பாலசிங்கம்

நேற்று நடைபெற்றது.

பொதுக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் நெல்லியடி சந்தியில் இருந்து 27 கரும்புலிகளின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தி பாண்ட் இசையுடன் ஊர்வலமாக கூட்ட மைதானத்துக்கு எடுத்து வரப்பட்டது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ஸ்தூபியில் மில்லர் தாக்குதல் நடத்திய நேரமான இரவு 7.05க்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

அச்சமயம் 27 கரும்புலிகள் பெயரில் வெளிச்சக் கூடுகள் ஏவப்பட்டன.

அதைத் தொடர்ந்து வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் செல்வன் தலைமையில் கூட்டம் நடந்தது.

இக்கூட்டத்தில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன், கடற்புலிகள் விசேட தளபதி திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவுடன் கூட்டு வைக்கும் முடிவால் இ.தொ. காவுக்குள் பெரும் அதிருப்தி

### மலையகத்தில் "பெரிய கூத்து" என வர்ணனை

கொழும்பு, ஜூலை 6

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிட முடிவு செய்திருப்பது காங்கிரஸ் வட்டாரங்களிலும் இந்திய வர்த்தக வட்டாரங்களிலும் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முடிவை எடுத்த இ.தொ.காவின் தேசிய சபைக் கூட்டத்தில் பலர் எதிர்வரும் தேர்தலில் இ.தொ.கா. தனித்துப் போட்டியிட வேண்டும் என்று வற்புறுத்தினர் என்றும் அப்போதுதான் பேரம் பேசும் நிலையில் இருக்க முடியும் என்று வாதாடினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியுறும் பட்சத்தில் இ.தொ.காவினால் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர்கள் காரணம் காட்டினராம்.

ஐ.தே.க. முகாமில் வலுவிழந்த கைதிகளாக இ.தொ.காவினர் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர்கள் எச்சரித்தனராம்.

இந்திய வர்த்தக சமூகத்தின் பிரபல புள்ளிகளும் இ.தொ.கா. தனித்துப் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர்.

ஜனாதிபதி விஜேதுங்க செல்லச்சாமியை அரவணைத்துக் கொண்டு, தொண்டமானை மதிக்காமல் நடந்த போது, தொண்டமான் மலையப்பகுதியில் கூட்டம் நடத்தி, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர்களை பேரினவாதிகள் என்று கண்டித்து வந்ததை இ.தொ.கா. தனித்துப் போட்டியிட வேண்டும் என்று வாதாடியவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இணைந்து போட்டியிடும் முடிவினால் எரிச்சலுற்ற இ.தொ.கா. அதிகாரி ஒருவர்,

''தமிழருக்கு நன்மை செய்யாத கட்சி என்று எம்மால் குற்றஞ் சாட்டப்பட்ட ஐ.தே.க பட்டியலில் யானைச் சின்னத்தின் — கீழ் எப்படி இ.தொ.காவினர் போட்டியிடுவது?'' என்று கேட்டார்.

இது மலையகத்தில் 'பெரிய கூத்து' ஆகத்தான் இருக்கும் என்றும் அவர் வர்ணித்தார்.

### தேர்தலில் போட்டியிடுவதற்காக

## புளொட், ரெலோ, ஈரோஸ் கூட்டு முன்னணி அமைப்பு!

கொழும்பு, ஜூலை 6

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகிய மூன்று இயக்கங்களும் கூட்டு முன்னணி ஒன்றை அமைத்துள்ளன.

'தமிழ்த்தேசிய முன்னணி' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ள இந்த முன்னணி வடக்கு - கிழக்கில் உள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் புளொட் சார்பாக சித்தார்த்தன், குரு இரத்தினலிங்கம், எஸ். பவான் ஆகியோரும்—

ரெலோ சார்பாக என். ஸ்ரீகாந்தா, எம். கே. சிவாஜிலிங்கம், ஏ. செல்வம், என். விநோதலிங்கம் ஆகியோரும்—

ஈரோஸ் சார்பாக என். ரி. சங்கர் ராஜி, கே. சுதாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த மூன்று தமிழ் அமைப்புகளும் தற்போது தொகுதி உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

இதன்படி கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இந்த முன்னணி ரெலோவின் சின்னத்திலும்—

வன்னி மாவட்டத்தில் புளொட் இயக்கத்தின் சின்னத்திலும்—

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈரோஸ் இயக்கச் சின்னத்திலும் போட்டியிட முடிவாகி உள்ளது.

(உ-இ)

## தேர்தலுக்கு முன்னர் வடக்கில் ராணுவ நடவடிக்கை இல்லை

### அரசியல் தீர்வே அரசின் முடிவாம்!

கொழும்பு, ஜூலை 6

பொதுத் தேர்தலுக்கு முன்பாக வடபகுதி போர்முனையில் எவ்வித இராணுவ நடவடிக்கைகளும் இடம்பெற மாட்டா.

ஐ.தே.க. தேர்தல் பிரசாரத்துக்குப் பொறுப்பான உயர்நிலை அதிகாரி முன்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலுக்கு முன்பாக விடுதலைப் புலிகளிடம் உள்ள பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கான விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை நடத்துமா என்று கேட்டதற்கே அந்த அதிகாரி முன்கண்டவாறு பதிலளித்தார் என்று ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

தற்போதைய யுத்தத்துக்கு அரசியல் தீர்வு மட்டுமே காணப்பட வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் பின்னர் விடுதலைப் புலிகளின் பிடியில் உள்ள பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கு மிகப் பெரிய ராணுவ நடவடிக்கை எதுவும் வடக்கில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அந்த அதிகாரி கூறினார்.

ஏனைய இராணுவ நடவடிக்கைகளும் பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கையும் ''தேடி அழிக்கும்'' ராணுவ நடவடிக்கைகள் மட்டுமே என்றும் அந்த அதிகாரி வர்ணித்தார்.

(உ-ஏ)

### முச்சந்தி முனி



எட்டாப் பழம் புளிக்கும் என்டமாதிரி ராணுவ நடவடிக்கையைக் கைவிட்டிட்டினம் போல...!

## கிளாலி சேவை இன்று நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 6

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் இடம்பெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

(உ-3)

## விமானபடை தலைமையகம் வேறு இடத்திற்கு மாற்றம்

கொழும்பு, ஜூலை 6

கொழும்பிலுள்ள விமானப் படைத் தலைமையகம் தற்காலிகமாக வேறு இடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கரும்புலிகள் நினைவு நாளில் விமானப் படைத் தலைமையகம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்று அஞ்சியே இந்த இடம் மாற்றம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நவீன வீட்டு வசதிகள் கொண்ட ஒரு பகுதிக்கு விமானப் படைத் தலைமையகம் மாற்றப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

(ஒ)

## தன் குழுவின் கட்டுப்பணம் குமார் செலுத்தினார்

கொழும்பு, ஜூலை 6

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் தலைமையில் சுயேச்சைக்குழு ஒன்று நேற்று கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியது.

வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் சுயேச்சைக்குழு நிறுத்தப்பட்டிருப்பதாக திரு. குமார் பொன்னம்பலம் பி. பி. ஸியின் சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

கட்சி பேதமின்றி தமிழ் வாக்குகளை ஒன்று திரட்டும் முயற்சியாகவே சுயேச்சைக் குழு அமைக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

வழமையாக கொழும்புப் பகுதி தமிழரின் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே கிடைத்து வந்தன. இம்முறை அது சாத்தியமில்லைப் போல் தெரிவதாக பி. பி. ஸியின் சிங்களச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

(உ-ஏ-6)

### தெல்லிப்பழைக்குச் சென்று

## வேட்பு மனு தாக்கல் செய்ய விசேட விமானம் ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 6

கொழும்பில் இருந்து கொண்டு யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவோர் தெல்லிப்பழைக்குச் சென்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்காக விசேட விமானம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்—

விமானக் கட்டணத்தை வேட்பாளர்களே செலுத்த வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்தார்.

தம்மைச் சந்தித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவிடம் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

(ஒ-ஏ)

## மூன்றாவது தரப்பு ஊடாக புலிகளுடன் அரசு பேச்சு!

### "சண்டே ஐலண்ட்" தகவல்

கொழும்பு, ஜூலை 6

விடுதலைப் புலிகளுடன் மறைமுகப் பேச்சுவார்த்தையை மூன்றாவது தரப்பு ஊடாக அரசாங்கம் நடத்தி வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்துக்குப் பொறுப்பாக இருக்கும் உயர்நிலை அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கடந்த வார 'சண்டே ஐலண்ட்' பத்திரிகைச்செய்தி வெளியிட்டிருக்கிறது.

எதிர்வரும் பொதுத்தேர்தலை யாழ். குடாவின் எல்லாப் பகுதியிலும் நடத்த முடியும் என்று தாம் நம்புவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் தன்மை பற்றிக் கேட்டதற்கு —

பேச்சுகள் இன்னும் பூர்வாங்க கட்டத்திலேயே

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸுடனான உறவு இம்முறை நிலைக்கும்

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 6 பட்ட தேர்தல் கூடன் முஸ்லிம் காங்கிரஸுடன் பாட்டை குலைக்க இடமளிக்க இம்முறை செய்துகொள்ளப் போவதில்லை என்று சுதந்திரக்கட்சிப் பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்க உறுதியளித்திருக்கிறார்.

1988 இல் உருவான சுதந்திரக்கட்சியின் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறியதன் பின்னணி பற்றி அஷ்ரப் விளக்கியபோதே, சந்திரிகா முன்கண்ட உறுதிமொழியை அளித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

1988 உடன்பாட்டில் சேர்க்கப்பட்டிருந்த சில அம்சங்கள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்தே முஸ்லிம் காங்கிரஸ் அம்முன்னணியில் இருந்து வெளியேறியது.

அதற்குக் காரணமானவர்கள் இப்போது சுதந்திரக் கட்சியில் இல்லை என்றும் சந்திரிகா தெரிவித்தார். (இ)

## புலிகள் மோதும் இடங்களிலுள்ள

# ஊர்காவற் படையினருக்கு சம்பளம் ரூ. 10 அதிகம்!

கொழும்பு, ஜூலை 6

ஊர்காவற் படையினரின் சம்பளம் நாளொன்றுக்கு 55 ரூபாவில் இருந்து நாறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்காவின் சிபார்சுக்கு இணங்க அமைச்சரவை இவ்வாறு தீர்மானித்திருக்கிறது.

விடுதலைப்புலிகளுடன் நேரடிமோதலில் ஈடுபடும் பகுதிகளில் கடமைபுரியும் ஊர்காவற் படையினருக்கு மேலதிகமாக நாளொன்றுக்கு 10 ரூபா வழங்கப்படும் என்றும் —

இக்கொடுப்பனவுகள் இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்காவில் 15 ஆயிரத்துக்கு அதிகமான ஊர்காவற் படையினர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


## இணுவில் கந்தசுவாமி கோயில் சப்பரத் திருவிழா

காலம்: 06 – 07 – 1994
நேரம்: பிற்பகல் 6-00 மணி

பகல் அபிஷேக ஆராதனைகளுடன் புதிதாக வர்ணம் தீட்டப்பட்ட சப்பரத்தில் எம் பெருமான் வீதிவலம் வருவார்.

குறிப்பு:
மேற்படி சப்பர சித்திர வர்ண வேலைப்பாடுகளை இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர் சபை சித்திரக் கலை ஆசிரியரும், சேவைக்கால சித்திரக் கலை ஆலோசகருமான திரு. செ. வரதராஜன் அவர்களும் மாணவர்களும் உருவாக்கியுள்ளனர்.

— உபயகாரர்.

[7256]



## தவறிவிட்டது தகவல் தரவும்

வெள்ளை நிற பொமரேனியன் ஆண் நாய் ஒன்று சிவப்பு பட்டி, லைசன் தகட்டுடன் காணாமல் போய் விட்டது. கண்டவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

D பிரேம்குமார்
83, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(31774)



## யாழ். ஜெய்ப்பூர் செயற்கை அவயவ பாவனையாளர்களுக்கு

எமது நிறுவனத்தின் 7 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி 22 – 07 – 94 வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் விளையாட்டுப்போட்டிகள் (சைக்கிள் ஓட்டம், துரிதநடை, குண்டு எறிதல் தடைதாண்டல்) கவிதை, கட்டுரை, சிறுகதை என்பவற்றிற்கான விண்ணப்பத் திகதி 15 – 07 – 94 வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதைப் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பாவனையாளர் நேரில் அல்லது கடிதம் மூலம் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். முகவரி, செயற்கை அவயவ பதிவு எண் என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

குறிப்பு:-

1. கவிதை, கட்டுரை, சிறுகதை என்பன யாவும் அவயவ இழப்பு மீள்வாழ்வு சம்பந்தப்பட்டதாக கட்டாயம் அமைய வேண்டும்.
2. போலியோ, அங்கக்குறைபாடு என்பவற்றால் பாதிக்கப்பட்டு எமது ஸ்தாபனத்தில் பயன்பெற்றவர்கள் யாவரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்ட நிர்வாகக்குழு

சி-8706)


## நினைவுக்கல் நாட்டல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

கடந்த 30 ஆம் திகதி முல்லைத்தீவு - நெடுங்கேணியில் இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவு தழுவிக்கொண்ட முல்லைத்தீவு கோட்டத் துணைப் பொறுப்பாளர் மேஜர் தொண்டமானின் திருவுருவப்பட ஊர்வலம் இன்று நடைபெறவிருக்கிறது.

அவரது வித்துடல் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று காலை 9 மணிக்கு பூரண அணிவகுப்பு மரியாதையுடன் புத்தூர் மாவீரர் மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

இறுதி வீரவணக்கக் கூட்டத்தையடுத்து திருவுருவப்படம் இராணுவ மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவுக்கல் நாட்டப்படும். (உ-3)

## ஜூன் 25 முதல்

# கொழும்பில் தொடர் குண்டுத்தாக்குதல்கள்

## புலிகள் திட்டமிட்டிருந்தனராம்

கொழும்பு, ஜூலை 6

கரும்புலிகள் சென்ற மாதம் 25 ஆம் திகதியில் இருந்து கொழும்பு மாநகரில் குண்டுத் தாக்குதல்களை ஆரம்பிக்க இருந்தனர் என்றும் —

கொழும்பு 7 இல் கிரகரி வீதியில் உள்ள குற்றப் புலனாய்வுப் பணியகத் தலைமையகக் கட்டடமே தாக்குதலுக்கு முதலாவது இலக்காக இருந்தது என்றும் — பொலீஸ் விசாரணைகளை மேற்கோள்காட்டி "சண்டே ஒப்சேர்வர்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் தலைமையகத்தைத் தொடர்ந்து தென்முள்ள சந்தியில் உள்ள விமானப்படைத் தலைமையகம் மற்றும் முக்கிய பாதுகாப்பு நிலைகள் மீது குண்டுத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தவிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காமினி திஸநாயக்காவும் விடுதலைப் புலிகளால் இலக்கு வைக்கப்பட்டிருந்தார் என்றும் —

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக காமினி திஸநாயக்கா நியமிக்கப்படின் அவர் இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு மீண்டும் கொண்டு வரலாம் என்று விடுதலைப்புலிகள் கருதியதே அதற்குக் காரணம் என்றும் அதிகாரிகளை மேற்கோள் காட்டி சண்டே ஒப்சேர்வர் தகவல் வெளியிட்டிருக்கிறது.

# தொண்டாவின் பேரனுடன் சந்திரசேகரன் பேச்சு

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரனும் இ. தொ. காவின் புதிய பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானும் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தினர் என்றும் —

சந்திரசேகரனை மீண்டும் இ. தொ. காவில் சேர்த்துக் கொள்வது என்ற அடிப்படையில் இப்பேச்சுகள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுகள் பலனளிக்காத நிலையில் முடிவடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து திரு. சந்திரசேகரன் தனது மலையக மக்கள் முன்னணியை மலைநாட்டில் பெரிய அரசியல் இயக்கமாகக் கட்டி எழுப்புவது என்று திட்டமிட்டு செயலாற்றி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஆலயங்களில்

வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு மகா சங்காபிஷேகம் நடைபெறும். மாலையில் சுவாமி வீதியுலா வரும். [•]

★ ★ ★

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து பதினேழு தினங்கள் நடைபெறும்.

ஜூலை 23 ஆம் திகதி வேல் பவனி விழாவும் 24 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-117)

★ ★ ★

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு நடுக்காயம்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மணவாளக் கோலவிழா நவோத்தர சகஸ்ர (1009) சங்காபிஷேகம் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்னும் பொருளில் இலங்கை தமிழ் மாமன்ற அமைப்பாளர் இருவை ஜீவமோகன் சொற்பொழிவாற்றுவார். அதனைத் தொடர்ந்து திருவீதி உலா பாரதி வீதி, முதலியார் வீதி, நாவலர் வீதி, ஸ்ரான்லி வீதி வழியாக இடம் பெறும். (க-111)

★ ★ ★

இணுவில் கந்தசாமி கோயில் சப்பறத் திருவிழா இன்று பிற்பகல் 6 மணிக்கு நடைபெறும் புதிதாக வர்ணம் தீட்டப்பெற்ற சப்பறத்தில் எம்பெருமான் வீதிவலம் வருவார். (க-89)

## பாடசாலைகளில்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பரிசு நாளும் ஸ்தாபகர் தினமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2-15 மணிக்கு நடைபெறும். முதன்மை விருந்தினராக வலயம் 2இன் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தனும் கலந்துகொள்வார்கள். பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ஸ்தாபகர் தினப் பேருரையை நிகழ்த்துவார். (க-28)

★ ★ ★

உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் நாளை 7ஆம் திகதியும் மறுதினம் 8ஆம் திகதியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (க-152-90)

# மக்கள் தமிழ் காங்கிரஸும் தேர்தலில் போட்டியிடுமாம்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் "மக்கள் தமிழ் காங்கிரஸ்" என்ற கட்சியும் போட்டியிடும்.

குமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வேட்பாளர் பட்டியலில் இணைந்த இக்கட்சியின் வேட்பாளர்கள் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவார்கள் என கட்சியின் தலைவர் தம்பையா எஸ். நிலைஜோதி தெரிவித்துள்ளார். (இ)

# எதிரணிக் கூட்டங்களைக் குழப்ப ஐ.தே.க. குண்டர்கள்

## கிராமங்களுக்கு விரைந்துள்ளனராம்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரங்களை குழப்புவதற்காக குண்டர் குழுக்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் கிராமங்களுக்கு அனுப்பி வைத்திருப்பதாக, முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்தின குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

கடந்த தென்மாகாண சபைத் தேர்தலில் நடந்து கொண்டது போன்று முன்னணியின் பிரசாரத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட ஐ.தே.கவின் குண்டர் குழுக்கள் தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். (உ-எ-6)

# கிராம அதிகாரிகள் பயிற்சி நெறி ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 6

சமாதானத்தை மேற்கொண்டு அமைதியை நிலைநாட்டும் அலுவலர் என்பதை மறக்காது கிராம அதிகாரிகள் பணி புரிய வேண்டும். யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் புதிதாக நியமனம் பெற்ற கிராம அதிகாரிகளுக்கான பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது: மக்களின் கண்களாகவும் காதுகளாகவும் கிராம அதிகாரிகள் செயற்பட வேண்டும். கிராமப்புற மக்களிடையே தேங்கி நிற்கும் சக்தி வளங்களைக் கண்டறிந்து, ஒன்று திரட்டி முன்னெடுத்துச் செல்வதில் கிராம அதிகாரிகள் ஒரு கிராமத்தின் தலைவராகச் செயற்பட வேண்டும்.

அமைதியை நிலைநாட்டும் அலுவலர் என்ற முறையில் கிராமத்தில் நிறைய விசனைகளை கிராம அதிகாரிகள் மேற்கொண்டு அமைதியை நிலைநாட்டலாம். "எவ்வளவுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைப் பிறருக்கு அளிக்கிறாயோ அவ்வளவுக்கு அவ்வளவு லாபத்தை பெறுவாய்" — என்ற தாகூரின் பொன்மொழியை மனதில் இருத்திச் செயற்பட வேண்டும் — இவ்வாறு அவர் கூறினார். (எ)

# வடமராட்சி அரச ஊழியர்: தனி போக்குவரத்து வசதி

## நடவடிக்கை எடுக்கப்படுகிறது

வடமராட்சி, ஜூலை 5

யாழ்ப்பாணத்திலுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் சபைகளில் பணிபுரியும் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கென யாழ். அரச அதிபரிடம் எரிபொருளைப் பெற்று, தனியான மினிபஸ் ஒன்றை சேவைக்கு அமர்த்த வடமராட்சிப் பகுதி அரச ஊழியர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-173)

## கைத்தொழில் அதிகாரசபையின்

# பயிலுநர்கள் பயிற்சி பெறும் காலம் குறைக்கப்படுகிறது

## போதிய நிதி ஒதுக்கப்படாததால்

யாழ். மாவட்டத்தில் பல திணைக்களங்களில் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையின் அனுமதியுடன் பயிற்சி பெற்றுவரும் பயிலுநர்களின் பயிற்சிக்காலம் குறைக்கப்பட்டுள்ளது.

பயிலுநர்களுக்கு வழங்குவதற்கான நிதியை பொது நிர்வாக அமைச்சு வழங்காததாலேயே பயிற்சிக்காலம் குறைக்கப்பட்டுள்ளது.

ஒருவருட கால ஒப்பந்தத்தின் கீழ் நியமனம் பெற்ற இவர்கள் மேலும் ஒருசில வருடங்களுக்கு கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தற்சமயம் நிதிபற்றாக்குறை காரணமாக ஆரம்பத்தில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த சகலரும் வேலையில் இருந்து நிறுத்தப்படவிருக்கின்றனர்.

சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு பயிற்சி பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (எ-3)

# கடைசி நேரத்தில் ஐ.தே.க. செல்லச்சாமியைக் கைவிடும்

## கொழும்பு பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜூலை 6

தொண்டமானின் நெருக்குதல் காரணமாக செல்லச்சாமியை ஐக்கிய தேசியக்கட்சித் தலைமைப்பீடம் "பதினோராம் மணித்தியாலத்தில்" கைவிட்டு விடும் என்பது நிச்சயமாகி விட்டதாக "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஐ.தே.க வேட்பாளராக தம்மை நியமிக்கும்படி செல்லச்சாமி விண்ணப்பித்திருப்பதும் —

செல்லச்சாமிக்கு ஐ.தே.க. நியமனம் வழங்கப்படுவதற்கு தொண்டமான் பலத்த எதிர்ப்புத் தெரிவித்திருப்பதும் தெரிந்ததே.

இந்த நிலையில் அரசக்கட்டுப்பாட்டில் உள்ள லேக்ஹவுஸ் பத்திரிகைகள் செல்லச்சாமி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸில் சேர்ந்து தேர்தலில் போட்டியிட விருப்பதாக செய்திகள் வெளியிட்டுள்ளன.

உடனே செல்லச்சாமி லேக்ஹவுஸ் தலைவர் சரத் அமுனுகமவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு யார் இச்செய்தியைக் கொடுத்தது என்று கேட்டாராம்!

ஆளும் கட்சி செல்லச்சாமியைக் கைவிடப்போகிறது என்பதைக் கோடி காட்டுவதாக அரசப் பத்திரிகைச் செய்திகள் அமைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது (உ-எ)

## பிரிவுபசார வைபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

சண்டிலிப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு ஐ. மனோகரனுக்கு நவாலி விடேஷன் அரசினர் பாடசாலையில் அண்மையில் பிரிவுபசார வைபவம் ஒன்று நடத்தப்பட்டது.

அதிபர் திரு. க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அதிபர்கள் திரு. ஏ. வி. கணேசலிங்கம், திரு எஸ். ஸ்ரீகாந்தன், திரு. ஜி வி. ராதாகிருஷ்ணன், திரு. எஸ். தர்மசோதி, உப அதிபர் திரு து. சிவஞானம் முதலியோர் உரை நிகழ்த்தினார்கள். (க-4)


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 1994 சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா போட்டி விவரம்

### பாடசாலை மாணவர்களுக்கான போட்டி

| திகதி | விபரம் | போட்டி | இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 09-07-1994 | ஆரம்ப பிரிவு. கீழ்பிரிவு மத்திய பிரிவு | கட்டுரை | யாழ் மத்திய கல்லூரி | காலை 9மணி |
| 09-07-1994 | ஆரம்ப பிரிவு, கீழ்பிரிவு மத்திய பிரிவு | | | |
| 10-07-1994 | மேற்பிரிவு. அதிமேற் பிரிவு | பேச்சு | யாழ். மத்தியகல்லூரி | காலை 10மணி |
| 10-07-1994 | மேற்பிரிவு அதி மேற்பிரிவு | கட்டுரை | யாழ் மத்தியகல்லூரி | காலை 9மணி |
| | | பேச்சு | யாழ். மத்தியகல்லூரி | காலை 10மணி |

மேற்படி போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த மாணவர்கள் உரிய நேரத்துக்கு சமூகம் கொடுத்து போட்டிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இல: 14, மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.

—பதில் செயலாளர்.

குறிப்பு:
1. மாணவர்களுக்கு தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்படமாட்டா;
2. பாடசாலை மாணவர் வினாடி வினா போட்டி தகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(சி/8705)



A/L 96

CHEMISTRY
MR. மகேஸ்வரன்
B. Sc (Hons)
சனி, ஞாயிறு பி.ப. 5 00

PHYSICS
MR. மோகன்
B. Sc
திங்., வியா., பி.ப. 5 00

BOT , ZOO. நடைபெறுகின்றது.

SHAMROCK
யாழ்: சுண்டுக்குளி
(31772)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தவப்பேறு: 05 — 11 — 1923



சிவப்பேறு: 18 — 06 — 1993

ஊரெழு மேற்கைச் சேர்ந்த
ஆசிரியரும், பிரபல சமூகத்தொண்டரும்,
தியாகி திலீபனின் தந்தையுமாகிய

### அமரர் நாகலிங்கம் இராசையா

திதி. 06 - 07 - 1994

அன்பின் சோதியே பாசத்தின் பிறப்பிடமே உங்கள் திருமுகம் மறைந்து ஆண்டு ஒன்று போனாலும் இன்பமாய் நாம் வாழ்ந்த காலத்தை நினைத்து மறக்க முடியாமல் தவிக்கிறோம். எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டியாய் நின்று இறுதிவரை எம்மைக் காத்துநின்ற எங்கள் தெய்வமே நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வாழ்நாள் முழுவதும் இறைவனை பிரார்த்திக்கும்!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

இ. நம்பி
(மகன்)

திலீபன் வீதி.
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(31771)

Digitized by Noolaham Foundation

# அரபாத் ஜெரிக்கோ விஜயம்; மக்கள் திரண்டு வரவேற்பு

## நிர்வாகக் கவுன்ஸில் உறுப்பினருக்கு பதவிப்பிரமாணம்

ஜெரிக்கோ, ஜூலை 6 பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் ஜெரிக்கோ நகருக்கு நேற்று விஜயம் செய்தார். பலஸ்தீன மக்கள் அவர்களுக்கு பெரும் வரவேற்பு அளித்தனர்.

எகிப்து அரசுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த அவருக்கு இஸ்ரேலிய விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் பாதுகாப்பு வழங்கியது.

இஸ்ரேலிய - பலஸ்தீன சமாதான உடன்படிக்கையின் கீழ் அமைக்கப்படும் பலஸ்தீன சுயாட்சிப் பிரதேசத்துக்கு ஜெரிக்கோவே தலைநகராக இருக்கிறது.

ஜெரிக்கோவில் அரபாத்துக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பலஸ்தீன சுயாட்சி நிர்வாகத்தை நடத்தவுள்ள நிர்வாகக் கவுன்ஸிலின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அரபாத் நேற்று பதவிப் பிரமாணம் செய்து வைக்கவிருந்தார்.

இதற்கு முன்னர் அரபாத் காஸாவுக்கு விஜயம் செய்திருந்தது தெரிந்ததே.

காஸாவில் இருந்தே அவர் ஜெரிக்கோ பயணமானார்.

(இ-எ)

---


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

வருடாந்த

இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்:- 09-07-1994 சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணி

முதன்மை விருந்தினர்

கப்டன் நா. சோமசுந்தரம்

அவர்கள்

(முன்னாள் பிரதி அதிபர்)

பரிசில் வழங்குநர்

திருமதி கனகாம்பிகை சோமசுந்தரம்

அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:

அதிபர்

ஆசிரியர், மாணவர்கள்.

இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
01-07-1994. (இ/8598)


---

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி மாசிலாமணி பாக்கியமலர்**

மலர்வு: 26-06-1936 உதிர்வு: 30-07-1989

திதி. 06-07-1994

தேவருலகில் வாழ்கின்ற -- எங்கள்
தெய்வத்தின் திருநாளில்
பாமலர் தூவுகின்றோம் — நாளும்
"பாக்கியமலர்" காவுகின்றோம்.

பேசிச்சிரித்த முகம்பார்த்து - தாய்மைப்
பெட்டகத்துள் - தவழ்கின்றோம்
வீசிச் சிரிக்கும் பொன்சாற்றில் - மாசில்
வீணையின் தவமாகின்றோம்.

அம்மாவைப் பாடிடுவோம் - தினமும்
அம்மாவைப் பாடிடுவோம்
இம் மாநிலம் இருக்கும் வரையும் பெற்ற
எம்தாயை என்றும் வணங்குவோம்.

ஆண்டுகள் பல கழிந்தாலும் அன்பு மறவாத!
கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள், தந்தை,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். ([illegible])

---

# புலிகளின் குரல் வானொலியில்

**06-07-1994**

**புதன் இரவு**

- ★ 8-01 — கரும்புலிகள் தின நிகழ்ச்சிகளின் தொகுப்பு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — "ஞானம் புதிது"

**07-07-1994**

**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீரனை நினைக்கும் [illegible]
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# பொதுசன மாதாந்த உதவி

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பொதுசன மாதாந்த உதவி பெறுபவர்களுக்கான ஜூலை மாதக்கொடுப்பனவு பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவினரால் அந்தந்தப் பிரிவு தபால் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(க-117)

# ஜெயவிக்கிரம பெரேராவின் கின்னஸ் சாதனை

கொழும்பு, ஜூலை 6 தனது பெயர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறுமென அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பதாகத் தாம் அமைச்சர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டதே தமது சாதனை என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

# விளையாட்டு பயிற்சிமுகாம் இறுதிநாள் நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 6 யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் தென்மராட்சிப் பிரிவு நடத்திய உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட பயிற்சி முகாமின் இறுதிநாள் நிகழ்ச்சி கடந்த மாதம் 25 ஆம் திகதி தென்மராட்சிப்பிரிவு விளையாட்டுத்துறை இணைப்பாளர் திரு. வை. இராஜேஸ்வரன் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி பிரதேச செயலர் திரு பு. சுந்தரம்பிள்ளை, தென்மராட்சி விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அலைவாணன், செல்வி சுஜாயினி, யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுச் செயலாளர் திரு ச. முருகேசன் [illegible]

---


# நூலகர் தேவை

பத்திரிகை அலுவலகத்தின் நூலகத்துக்குப் பொறுப்பாகப் பணியாற்றுவதற்கு அனுபவம் உடைய நூலகர் ஒருவர் தேவை.

ஆவணப்பிரிவு, உசாத்துணைப் பிரிவு, பதிவிடுதல் பிரிவு ஆகியவற்றினைக் கையாளக் கூடிய திறமையும், நூலக விஞ்ஞானத்தில் தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

முழுமையான சுய விபரங்களுடன் 07-07-1994க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்.
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்


---


# மாபெரும் இசை நிகழ்ச்சிகள்

07-07-94 வியாழக்கிழமை இரவு 7-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக திறந்த வெளியரங்கில் தமிழீழ இசைக்குழுவினருடன் தமிழீழத்தின் புகழ்பெற்ற பாடகர்களும் வாத்தியக் கலைஞர்களும் ஒரே மேடையில் இணைந்து வழங்கும்

"இன்னிசை கானங்கள்"

காணத்தவறாதீர்கள்.

இ-8704 புலிகள் குரல்


---

# யாழ்ப்பாண மாநகரசபை

## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் தற்காலிக பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொருத்தமான அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை, ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 15-07-1994ஆம் திகதி, வெள்ளிக்கிழமைக்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். விண்ணப்பத்துடன், பிறப்புச்சான்றிதழ், கல்வி/அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தனித்தனியாக பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுவான தகைமைகள்:

1. விண்ணப்பதாரர், மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. 18 வயதுக்கும், 40வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த உடல் ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

பதவிகள்:

சந்தை மேற்பார்வையாளர் பதவி: (தற்காலிகம்)

அ. க.பொ.த. சாதாரண பரீட்சையில் தமிழ், கணிதம், சுகாதாரம்/விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. தொழில் நுட்பச்சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2, பாதுகாப்புக் காவலாளிகள் பதவி: (தற்காலிகம்)

அ. க.பொ.த. சாதாரண பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. லொறிச்சாரதி பதவி: (தற்காலிகம்)

அ. 8ஆம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. லொறி செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் பெற்று, குறைந்தது மூன்று வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

4, உருளை இயக்குநர் பதவி: (தற்காலிகம்)

அ. 8ஆம் வகுப்பில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

ஆ. உருளை இயக்குநர் அனுமதிப் பத்திரம் பெற்று, உருளை இயக்குவதில் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

5. மருந்தரைக்கும் தொழிலாளர் பதவி: (தற்காலிகம்)

அ. 5ஆம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. சித்த வைத்தியரிடம் குறைந்தது 3 வருடங்கள் பணிபுரிந்த அனுபவம் வேண்டும்

6, பொது சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவி: (தற்காலிகம்)

அ. 5ஆம் வகுப்பில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1994-07-01; (இ-8701)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

"சன் பிறான்ட்" இனிப்பு, டொபி வகைகள் சொந்த மிதிவண்டியில் சென்று விற்பனை செய்யக்கூடியவர்கள் தேவை. முற்பணம் செலுத்தக் கூடியவர்கள் வேலை நாட்களில் நேரில் தொடர்பு கொள்ளவும். அனைவா, கொன்பக்ஷனறிஸ், பரமானந்தம் மில் கட்டடம், தாவடி, மானிப்பாய் சாலை, கொக்குவில். (31667)

நல்ல பழக்கவழக்கமுள்ள பெண் கொம்பொசிட்டர், பைன்டர், வேலைபழக ஆர்வமுள்ளவர்கள் தேவை: நேரில் வரவும். இல. 23, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (7500)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேர்க்ஸ், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி, தலைமையகம் 284, வானவில் அருகில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (கி-8299)

### பெயர்மாற்றம்

ஸ்ரீலங்கா அச்சகம், ஸ்ரீகாந்தா அச்சகம் ஒன்றிணைந்து இலங்கை பதிப்பகம் என்ற பெயரில் சேவையாற்றுகிறது. இலங்கை பதிப்பகம், பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (31668)

### ஆனந்தம் சியாககாய்

எமது உடம்புக்கு சிரேசிட பிரதானம். ஆயுர்வேதத்தாருக்குரிய முறைப்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டுவாங்கி பயன் பெறவும். (7486)

### வாடகைக்கு

நல்லூர் MPCS அருகாமையில் அமைந்திருக்கும் கடை ஒன்று வாடகைக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு அருகில் உள்ள அவரது வீட்டில் விசாரிக்கவும். M. சபாரட்ணம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (கி-8594)

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, வீடு, கை பார்த்தல், குறிப்பு எழுதுதல், அதிர்ஷ்ட எண் மாற்றம் ஆகியவற்றுக்கு ஜோதிடரை தினசரி 140, செம்மா வீதி, கன்னாதிட்டி சந்தைக்கு அருகாமையில் சந்திக்கலாம். (31746)

### யாருடையது?

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வாசகவதிறுசுறப் பிரிவின் தொண்டர் செல்வி சி. மதிவதனி கைக்கடிகாரம் ஒன்றை யாழ் நகரில் கண்டெடுத்துள்ளார். உரிமையாளர் இல. 59, கோவில் வீதியில் உள்ள பிரிவின் பணிமனையில் செயலாளரிடம் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (31757)

## மெய்வல்லுநர் சங்க பரீட்சை

மெய்வல்லுநர் சட்டவிதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகளை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்த இருக்கிறது.

இப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினம் எதிர்வரும் 15 ஆம் திகதியாகும்.

தொடக்குநர், நேரம் கணிப்பாளர், மத்தியஸ்தர்கள் (சுவட்டு நிகழ்ச்சி) மதியஸ்தர்கள் (மைதான நிகழ்ச்சி) ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகளே நடைபெறவிருக்கின்றன.

யாழ்:
பல்கலைக்கழகம்
## மகாபொல கொடுப்பனவு

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான 5ஆம் தவணைப்பணம் 06-07-94 முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

பதிவாளர்.
(கி-8703)

யாழ். இந்து மகளிர் கல்லூரி
## பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 10-07-1994 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நிகழவிருக்கிறது. தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்;

அன்றைய தினமும் வருடாந்த சந்தாப்பணத்தைச் செலுத்தலாம் என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

திருமதி ம. பரமநாதன்,
செயலாளர்.

செல்வி புஷ்பா செல்வநாயகம்,
தலைவர். [கி-8702]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வி சிவதர்சினி சிவசுப்பிரமணியம்

புன்னகை பூத்த முகத்தோடும் புனிதம் நிறைந்த அகத்தோடும், இந்தாண்டுகள் எம்முடன் பழகி பொருட் செல்வத்தையும் ஆடம்பரத்தையும் அலங்காரத்தையும் ஒதுக்கி "கல்வி அழகே அழகு" என்பதற்கிணங்க கல்வி கற்று க. பொ. த(சா/த)இல் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்று எங்கள் கல்வி நிறுவனத்திற்குப் பெருமை தேடித் தந்த சிவதர்சினியே!

கணிதத்துறையில் நீ கொண்ட மகத்தான அறிவு உம்மைப் பார் போற்றும் பொறியியலாளராக்கி நீர்வை மண்ணுக்குப் புகழ் சேர்க்கும் என நம்பியிருந்த வேளையில் சிங்கள அரசின் சுப்பசொனிக் உம்முயிரைக் குடித்து விட்டதே!

22-05-94 அன்று எமை விட்டுப் பிரிந்த அன்புச் செல்வி சிவதர்சினி, அவரின் தந்தை, மைத்துனி ஆகியோரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
ஐடியல் கல்வி நிறுவனம்.
நீர்வேலி. (7506)

உ
ஓம் கணேசாய நம
## விவாக சோபனம்

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் பவ வருடம் ஆனி மாதம் 25ஆம் நாள் (09 - 07 - 1994) சனிக்கிழமை புனர்வசு நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய பகல் 11-45 — 1-00 மணி வரையில் உள்ள சிம்ம லக்ன சுப முகூர்த்தத்தில்,

கொழும்பு - நாரஹென்பிட்டி
பிரம்மஸ்ரீ சாமிக்குருக்கள்
தியாகராஜ ஐயர்
அவர்களின்
ஏக புத்திரன்
**சிரஞ்சீவி சுமனோகரன்**

யாழ்ப்பாணம் - உடுவில்
ஸ்ரீசிவஞானப் பிள்ளையார் ஆதீனகர்த்தா
பிரம்மஸ்ரீ வாஞ்சீஸ்வரக் குருக்கள்
முத்துக்குமாரசாமி சர்மா
அவர்களின்
சிரேஷ்ட புத்திரி
**சௌபாக்கியவதி காயத்திரி**

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்ய விநாயகப் பெருமான் திருவருளுடன் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியார் அனுக்கிரகத்துடன் பெரியோர்கள் நிச்சயித்த மேற்படி சுபமுகூர்த்தம் லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் நடைபெறுவதால் தாங்கள் அனைவரும் இஷ்ட மித்ர குடும்ப சமேதரராய் பங்குபற்றி மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

பிரம்மஸ்ரீ
சா. தியாகராஜ ஐயர்
தம்பதிகள்.
(இளைப்பாறிய கணக்கதிகாரி)
67/5, பொல்ஹென்கொட வீதி,
கொழும்பு-5.
இலங்கை.

பிரம்மஸ்ரீ
வா. முத்துக்குமாரசாமி சர்மா
தம்பதிகள்.
(இளைப்பாறிய மாவட்ட விற்பனை அதிகாரி)
"திரிவேணி"
உடுவில்,
இலங்கை.

31, West Land House,
RY Mill Street
London E16 2LE
U. K.
[7253]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் மாசிலாமணி தேவநேரு
(முன்னாள் கிராமசேவை அலுவலர், தாவடி)

பிறப்பு: 18-06-1949
இறப்பு: 28-06-1992

திதி: **06-07-1994**

இரண்டு ஆண்டு சென்றாலும், உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்கவில்லை!

உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டி நிற்கும்;

மனைவி, மக்கள்,
தாய், சகோதரர்கள்:

இணுவில் மேற்கு,
இணுவில். (31755)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**
DAY CLASSES (8-30 — 2-00)
SAT. SUN. CLASSES (8-00 - 2-00)
EVENING CLASSES (4-15 — 6-30)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்: 07 - 07 - 1994

★ திறமையான பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு.
★ வாராவாரம் இலவச Paper Classes நடைபெறுகின்றன.
★ மொத்தம் 9 பிரிவுகளில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

[கி-8619]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஒப்பற்ற சாதனை!

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் விமானப் படையின் தலைமை அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் முடக்கிடக்கிறது. தலைநகர் கொழும்பில் அமைந்துள்ள அந்த அலுவலகத்தை, விடுதலைப் புலிகள், கரும்புலி வீரர் நினைவு தினத்தன்று குண்டு வைத்துத் தகர்க்கக் கூடும் என்ற அச்சத்திலேயே அதனை அரசு மூடுவதற்குத் தீர்மானித்தது!

விமானப்படைத் தலைமையகத்தைத் தகர்ப்பதற்கான திட்டத்தை விடுதலைப் புலிகள் வகுத்திருக்கிறார்கள் என்பது இரகசியப் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்ததாகவும், அதனைத் தொடர்ந்தே விமானப்படைத் தலைமையகம் மூடப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொட்டாஞ்சேனையில் வெடிகுண்டுடன் கூடிய லொறி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறப்பட்டதால், விமானப்படைத் தலைமை அலுவலகம் தாக்கப்படலாம் என்ற வாதத்தைப் பலரும் நம்பினர். அதனால் கொழும்புத் தலைநகரம் கடந்த சில நாட்களாக அச்சத்தினால் நடுங்கியது. அரசாங்கம், அதன் படைத்துறை என்பன குலைநடுக்கம் பிடித்து நிலை தடுமாறின.

விடுதலைப் புலிகள் விமானப் படைத் தலைமையகத்தைத் தகர்ப்பதற்குத் திட்டமிட்டார்களோ இல்லையோ, தாக்குதல் எதனையும் நடத்தாமலே அவர்கள் பெரும் சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்கள் என்றே சொல்லலாம்.

விமானப் படைத் தலைமையகத்தை தற்காலிகமாக மூடியமை விடுதலைப் புலிகளுக்கு அரசு, அதன் படைப் பட்டாளங்களும் எந்த அளவுக்கு அஞ்சுகின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறது அதாவது விடுதலைப் புலிகள் பலமானவர்கள், அரச படைகள் பலவீனமானவை என்பதை அரசாங்கமே ஒப்புக் கொண்டதாக அமைகிறது!

ஸ்ரீலங்கா ஒரு சுயாதிபத்திய நாடு. அதற்கென ஓர் அரசாங்கம் உண்டு. அந்த அரசாங்கத்துக்கென நாட்டின் பல்வேறு வளங்களும் திரட்டப்பட்டுள்ளன. அந்த வளங்களைக் கொண்டு தமிழர்களின் விடுதலைப் போரை நசுக்கவும், உரிமைகளைப் பறிக்கவும் அரசு முடிவு செய்தது. அந்த முடிவின் இறுதி விளைவே யுத்தம்.

ஆனால் அரசின் படைகளால் அந்த யுத்தத்தில் வெல்லமுடியவில்லை. யுத்தத்தை வெல்லமுடியவில்லை என்பது ஒரு புறமிருக்க, அவை விடுதலைப் புலிகளுக்கு அச்சம் கொண்டுள்ளன என்பதும் பகிரங்கமாகிவிட்டது.

விமானப்படை ஸ்ரீலங்கா அரசின் படைகளில் முக்கியமானது. யுத்தகளத்தில் இராணுவம் தரைமார்க்கமான சண்டையை முன்னெடுத்துச் செல்வதற்கு விமானப் படையையே நம்பியிருக்கிறது. அத்தகைய ஓர் அரச படைப் பிரிவின் தலைமையகத்தை எதிரிப்படைக்கு அஞ்சி மூடுவது என்பது உலக சரித்திரத்திலேயே பெரும் வெட்கக் கேடானதாகும். அதேவேளை விடுதலைப் புலிகளின் வலிமையை வரிஜிதம் செய்வதுமாகும்.

விமானப்படை தலைமையகத்தை மூடுவது என்பது, அதற்குச் சொந்தமான அத்தனை விமானங்களையும் சுட்டு வீழ்த்தியதற்கு நிகரான ஒப்பற்ற சாதனை என்று கூறினும் மிகையாகாது!

தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள வேளையில், ஆளும் கட்சிக்கும் எதிரணிக்கும் இடையில் கடும்போட்டி நிகழும் என்று எதிர்பார்க்கப் படும் வேளையில், விடுதலைப் புலிகளின் பெயரைச் சொல்லி மேற்கூறிய இருதரப்பினரில் ஒரு சாரார், மிகக்குறிப்பாக ஆளுங்கட்சியினரே தங்கள் அடாவடித்தனங்களைக் காட்டலாம். அதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு.

எது எப்படியோ —

இரும்பு என்றால் பேயும் நடுங்கும் என்று கூறுவது போல, கரும்புலிகள் என்ற பெயர் கேட்டாலே அரச படைகள் ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கிநடுங்கும் என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது! இந்தப் பலமான நிலை நீடித்தாலே யுத்தம் நடத்துவதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசு தள்ளப் படும்!

# சகல ரயில் சேவைகளையும் மதவாச்சியுடன் நிறுத்த முடிவு?

கொழும்பு, ஜூலை 6

வவுனியாவுக்கும் கொழும்புக்கும் இடையிலான சகல ரயில் சேவைகளையும் மதவாச்சியுடன் நிறுத்திவிடுவதற்கு பாதுகாப்பு உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தல் காலத்தில் வவுனியாவை மட்டுமல்லாமல் தென்பகுதியையும் சீர்குலைக்க புலிகள் முயற்சிக்கக் கூடும் என்ற அச்சம் பாதுகாப்பு பகுதியினர் மத்தியில் எழுந்துள்ளதாகவும்—

அதனைத் தடுப்பதற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்துவருவதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஓர் அம்சமாகவே வவுனியா வரையான சகல ரயில் சேவைகளையும் மதவாச்சியுடன் நிறுத்திவிட ஆலோசனை கூறப்பட்டுள்ளதாம்.

பயணிகளை ஏற்றி இறக்கு வதற்காக தாண்டிக்குளத்திலும், வவுனியா ரயில் நிலையத்திலும் ரயில்கள் நிறுத்தப் படும் போதும்—

பிரயாணப் பெட்டிகளை சுத்தம் செய்யும் வேளையிலும் குண்டுகள் வெடிக்க வைக்கப்படும் சம்பவங்கள் இடம்பெறலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அதனைத் தடுப்பதற்காகவே இந்தப் புதிய ஏற்பாடு குறித்து உயர்மட்டத்தில் சிந்திக்கப்படுவதாகவும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ரயில்சேவைகள் மதவாச்சியுடன் நிறுத்தப் படும்போது பயணிகள் நன்மை கருதி மதவாச்சிக்கும், வவுனியாவுக்கும் இடையே இணைப்பு ரயில் ஒன்றை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக ரயில்வே திணைக்களம் பாதுகாப்பு பகுதியினருடன் ஆராய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ)

### ஐரோப்பிய நாடு ஒன்றில்

## விஜேவீர குடும்பத்துக்கு அரசியல் தஞ்சம் கிடைக்கும்

கொழும்பு ஜூலை 6

கொல்லப்பட்ட ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீராவின் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் அரசியல் தஞ்சம் வழங்க இரண்டு ஐரோப்பிய நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசிடமிருந்து இது தொடர்பான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட இரண்டு ஐரோப்பிய நாடுகளும் எதிர்பார்த்து உள்ளன. விஜேவீர குடும்பத்துக்கு அரசியல் தஞ்சம் அளிக்கும்படி ஸ்ரீலங்கா அரசு முன்னர் பிரிட்டனைக் கோரியிருந்தது. பிரிட்டன் இதற்கு இணங்கவில்லை. ஐரோப்பிய நாடொன்றிலேயே தங்கியிருப்பதற்கு திருமதி விஜேவீர விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பு வீதம் வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 6

இலங்கையில் வாக்காளர்களின் எண்ணிக்கை 1.14 சத வீதத்தினாலேயே அதிகரித்துள்ளது என்றும்—

இதற்குக் காரணம் ஒருவர் பல இடங்களில் வாக்காளராகப் பதிவு செய்திருந்த பல சம்பவங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதே என்றும் தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் வாக்காளரின் எண்ணிக்கை பத்துச் சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது என்றும் அவர் கூறினார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது வாக்காளர் எண்ணிக்கை ஒரு கோடி 8லட்சத்து 88ஆயிரத்து 142 ஆக இருந்தது என்றும்—

இம்முறை ஒரு கோடி 9லட்சத்து 45ஆயிரத்து 241 பேர் வாக்களிக்கும் தகைமையைப் பெற்றுள்ளனர் என்றும் அந்த அதிகாரி சொன்னார். (இ-எ-6)

## திருவுருவப் படங்கள் நேற்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

கரும்புலிகள் நினைவாக யாழ். வணிகர் கழகத்தினால் யாழ் சீனன் தெருச் சந்தியில் (மூலவைச்சந்தி) அமைக்கப்பட்ட 14 கரும்புலி போராளிகளினது திருவுருவப் படங்களையும் நேற்றுக் காலை 10 மணிக்கு நிதர்சனம் பொறுப்பாளர் திரு ஜவான் திரை நீக்கம் செய்து வைத்தார்.

யாழ் வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. செந்தமிழன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னதாக ஈகைச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் திரு. பொன் தியாகமும், தமிழீழ தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சி. இளம்பரிதியும் ஏற்றினர்.

இப்பதினான்கு கரும்புலிகளினது திருவுருவப்படங்களுக்கு யாழ். மாவட்ட விசேட தளபதி திரு செல்வராசா மலர்மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து இக்குழுமியிருந்த மக்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து மௌன அஞ்சலியுடன் கரும்புலிகள் நினைவுச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த திருமதி தமிழ்ச்செல்வி, நிதர்சனம் பொறுப்பாளர் திரு ஜவான், யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தமிழ்ச்செல்வி, யாழ். வணிகர் கழகத் தலைவர் திரு. சிற்சபேசன் ஆகியோரும் உரையாற்றினர். (இ-4)

### வடபகுதிக்கு

## பொருள்களை அனுப்ப தொடர்ந்து அனுமதி மறுப்பு

### தொண்டர் அமைப்புகள் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடபகுதிக்கு பொருள்களை அனுப்புவதற்கு பாதுகாப்பு இணைப்புக் குழு தொடர்ந்தும் அனுமதிமறுத்து வருவதாக தொண்டர் அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் செயற்படும் பல தொண்டர் அமைப்புக்கள் தமது பொறுப்பில் உள்ள அகதிகளையும், முகாம்களையும் பராமரிக்க தேவையான பொருள்களை எடுத்து வர பாதுகாப்பு இணைப்புக் குழுவிடம் விண்ணப்பித்திருந்தன.

பாதுகாப்பு இணைப்புக் குழு இதற்கு அனுமதி வழங்குவதை பின்னடிப்பதாக கடந்த வாரம் கொழும்பில் இருந்து திரும்பிய தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (எ-3)

## யாழ். பயணிகளிடம் கொள்ளை முயற்சி

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூலை 6

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பயணிகளிடம் கிளிநொச்சியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி பயணிகளால் முறியடிக்கப்பட்டது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி இப் பயணிகள் அன்று கிளாலிப் படகுச் சேவை இல்லாதிருந்த காரணத்தால் கரடிப்போக்கில் உள்ள புத்த விகாரை ஒன்றில் தங்கி உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது துப்பாக்கி ஏந்திய நபர் ஒருவர் அவர்களின் உடைமைகளைக் கொள்ளையிட முயற்சித்தார். பயணிகள் சமயோசிதமாக அவரைத் தாக்க முற்பட்ட போது அவர் [illegible] யும் அவ்விடத்தில் போட்டு விட்டு தப்பி[illegible]. (க-76)

## வவுனியாவில் சிவசிதம்பரம்

கொழும்பு, ஜூலை 6

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம் சிவசிதம்பரத்தை வன்னி மாவட்டத்தில் தலைமை வேட்பாளராக நிறுத்துவதற்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.

கடந்த ஞாயிறன்று கொழும்பில் நடந்த கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டதாக அமைப்பின் நிர்வாகச் செயலாளர் அ. தங்கதுரை தெரிவித்தார். (உ-ஐ)

## அமைப்பாளராக நியமனம்

கொழும்பு, ஜூலை 6

ஓய்வு பெற்ற மேலதிக அரசாங்க அதிபர் த. அருணகிரிநாதன் சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் சார்பில் தேர்தலில் தலைமை வேட்பாளராகவும் அவர் போட்டியிடவுள்ளார். (உ-ஐ)

## குடியிருப்பு இடமாற்றம்

தென்மராட்சி, ஜூலை 6

முகமாலை அம்பளாவளையில் அமைக்கப்பட்டிருந்த சமுத்திரன் குடியிருப்பு இப்பகுதியில் நிலவும் கடும் வரட்சியால் ஏற்பட்ட குடிநீர்த் தட்டுப்பாடு காரணமாக முகமாலை தேவாலயத்திற்கு அருகில் உள்ள காணியொன்றுக்கு இடம் மாற்றப்படவுள்ளது. (-117)

## லேக்ஹவுஸுக்கு புதிய தலைவர்

கொழும்பு, ஜூலை 6

அரசக் கட்டுப்பாட்டில் உள்ள லேக்ஹவுஸ் பத்திரிகைகள் நிறுவனத்தின் தலைவராக திரு. குமார் ரூபசிங்க நியமிக்கப்படவிருக்கிறார்.

தற்போது தலைவராக இருக்கும் சரத் அமுனுகம எதிர்வரும் பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடவிருக்கிறார். அதனால் அவர் பதவி விலகவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. திரு குமார் ரூபசிங்கா இலங்கை ஒவிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகத் தற்போது இருக்கிறார். (உ-எ)

## ரணசிங்க மீதான குற்றச்சாட்டு நீக்கம்

கொழும்பு, ஜூலை 6

ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே ரணசிங்க மீது சுமத்தப்பட்ட சகல குற்றச்சாட்டுகளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு விலக்கிக் கொண்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படுகொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக பேசி வந்தது தொடர்பான குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தன.

சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் அவர் விடுவிக்கப்பட்டிருப்பதாக ஐ. தே. க. செயற்குழு அவருக்கு அறிவித்துள்ளது. (இ-எ)

## மட்டக்களப்பில் எண்முனைப் போட்டி

மட்டக்களப்பு, ஜூலை 6

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது எண்முனைப் போட்டி இடம் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஐ. தே. க., ஸ்ரீ. ல. சு. க. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய ஐந்து கட்சிகள் நேரடியாகத் தேர்தல் களத்தில் குதிக்கின்றன.

ரெலோ, புளொட், ஈரோஸ் ஆகியன இணைந்து சுயேச்சைக் குழுவொன்றை நிறுத்த நடவடிக்கை மேற் கொண்டுள்ளன.

ஈ. பி. டி. பியும் நேரடியாகப் போட்டியிடாது சுயேச்சைக் குழுவொன்றை நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்விமான்கள், ஆசிரியர்கள் அடங்கிய இன்னொரு சுயேச்சைக் குழுவையும் தேர்தலில் நிறுத்த ஒருசாரார் முயன்று வருகிறார்கள். (உ-எ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

கிளிநொச்சி சாரணர் மாவட்டத்தின் கிளைச் சங்க 13ஆம் வருடப் பொதுக் கூட்டம் [illegible] சந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. (எ)

## சிறுகதைப் போட்டியில் பரிசு

அவுஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியா இலங்கைத் தமிழ்ச் சங்கம் அதன் இரண்டாவது முத்தமிழ் விழாவை முன்னிட்டு அகில உலக ரீதியில் கவிதை, சிறுகதைப் போட்டிகளை நடத்தியது.

சிறுகதைப் போட்டியில் விக்டோரியா கிளேட்டனில் வசிக்கும் திருமதி சிவகௌரி ஸ்ரீ சிவஆனந்தகுமார் எழுதிய "நடந்து வந்த பாதைகள்" எனும் சிறுகதைக்கு முதற் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் முதற் பரிசாக 200 டொலரை அவர் பெற்றுக் கொண்டார்.

இவர் யாழ், அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரின் புதல்வி ஆவார்.

## மேட்டு நில செய்கைக்கு மண்ணெண்ணெய்

தென்மராட்சி ஜூலை 6

தென்மராட்சிப் பகுதியில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நான்காவது கட்டமாக முப்பது லீற்றர் மண்ணெண்ணெய் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்மராட்சிப் பிரிவு வட்ட அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகிறது (இ-117)

## இந்தி நடிகர் சஞ்சய் தத் மீண்டும் கைது

பம்பாய், ஜூலை6

பிரபல இந்தி நடிகர் சஞ்சய் தத் மீண்டும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக அவர் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஏ கே 47, கிரனேட் குண்டு மற்றும் ரவைகளை வைத்திருந்ததாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது (இ-எ)

## ரயர் ரியூப் விநியோகம்

யாழ்மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் கீழ் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் மினிபஸ்களுக்கு தற்போது நியாய விலையில் ரயர் ரியூப் விநியோகிக்கப்படுகிறது.

யாழ் மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத்தினால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட 50 ஜோடி ரயர், ரியூப்கள் முதற் கட்டமாக தற்போது விநியோகிக்கப்படுகின்றன

உடனடியாக பணத்தை செலுத்தி பெற வசதியற்ற மினிபஸ் உரிமையாளர்களுக்கு இவை கடன் அடிப்படையிலும் விநியோகிக்கப்படுவதாக யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத் தலைவர் திரு. அ. அமிர்தராஜா தெரிவித்தார். (க-4)

### தேர்தல் உடன்பாடு குறித்து

## ஒரே நேரத்தில் சந்திரிகா இரு கட்சிகளுடன் பேச்சு!

கொழும்பு, ஜூலை 6

தேர்தல் உடன்பாடு காணுவது தொடர்பான பேச்சுகளை திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இரண்டு மாடிகளை கொண்ட தனது வீட்டில் இரண்டு கட்சியினருடன் ஒரே நேரத்தில் நடத்தினார் என்றும் —

அவற்றில் ஒரு பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்தது என்றும் —

மற்றையது தோல்வியில் முடிந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாடியில் சந்திரிகா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தினார். நள்ளிரவு 12மணியளவில் அஷ்ரப்பும், சந்திரிகாவும் தேர்தல் உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

அதேவேளை கீழ்மாடியில், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவுடன் சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா மற்றும் லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோர் நடத்திய இடம் பெற்ற பேச்சுகள் பயன் ஏதும் காணப்படாத நிலையில் முடிவுற்றன. [உ-எ]

## பிரேமா கால "நரிகள்" குறித்து அமைச்சர் ரணசிங்க

கொழும்பு, ஜூலை 6

பிரேமதாஸா உயிருடன் இருந்த போது நரிகள்போன்று நடந்துகொண்டவர்கள் இன்று சிங்கங்கள் போன்று உறுமுகிறார்கள்.

ராஜாங்க அமைச்சர் ஏ ஜே. ரணசிங்க முன்கண்டவாறு தெரிவித்தார்.

பிரேமதாஸாவை நிந்தித்தவர்கள் இன்றுவரைப் புகழ்ந்து பேசுகிறார்கள், பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் மக்கள் விரைவிலேயே நல்ல பாடம் படிப்பிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

### தேர்தலுக்கு முன்னர் எஞ்சியுள்ள

## 'பாதாள உலக' நபர்களை பிடிக்க நடவடிக்கை!

### பொலீஸாருக்கு பணிப்பு.

கொழும்பு, ஜூலை 6

எஞ்சியுள்ள பாதாள உலகைச் சேர்ந்த குற்றவாளிகளை பொதுத் தேர்தல் நடைபெறும் தினத்துக்கு முன்பு கைது செய்து காவலில் வைக்கும் படி நாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களை பொலீஸ் தலைமைக் காரியாலயம் பணித்துள்ளது.

இக்குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து கைது செய்வதற்கு பல பொலீஸ் குழுக்கள் நாட்டின் பல பகுதிகளுக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

எதிர்வரும் ஆகஸ்ட் 16ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. (எ)

## கோட்டக் கல்வித் திட்டம் மீண்டும் அமுலுக்கு வரும்?

யாழ்ப்பாணம், ஜூலை 6

தற்சமயம் நடைமுறையில் உள்ள பிரதேசக்கல்வி அலுவலகத்திட்டத்தை கைவிட்டு.

முன்னர் நடைமுறையில் இருந்த கோட்டக்கல்வி அலுவலகத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து கல்வி அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

கோட்ட அலுவலகத் திட்டம் அமுல் செய்யப்பட்ட சமயம் துரிதமாக வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன என்றும் —

பிரதேச கல்வி அலுவலகத்திட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் வேலைகள் மந்தகதியில் மேற்கொள்ளப்படுவதாகவும் —

நிதி வீணே செலவிடப்படுவதாகவும் —

இத்திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை என்றும் — கல்வியமைச்சு நடத்திய ஆய்வுகள் தெரிவிப்பதாக கல்வித் துறை சார்ந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து கல்வியமைச்சு அதிகாரிகள் பிராந்திய கல்வி அலுவலகங்களுக்கு விடுத்த பணிப்புரையில்—

இத் திட்டம் வெற்றியளிக்காத பட்சத்தில் ஏற்கனவே நடைமுறையில் இருந்த கோட்டக்கல்வி அலுவலகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளது.

இந்தப் பணிப்புரையை தொடர்ந்த தென் இலங்கையில் பெரும்பாலான பிராந்தியக் கல்வி அலுவலகங்கள் முந்திய திட்டத்தை அமுல் செய்ய ஆரம்பித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சு இது விடயமாக இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் முந்திய திட்டத்தின் படி 6 கோட்ட அலுவலகங்கள் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## மாற்றுச் சக்தி உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6

ஸ்ரீலங்கா அரசினால் தடைவிதிக்கப்பட்ட எரிபொருள், மின்சக்தி ஆகியவற்றுக்கு மாற்றீடாக மாற்றுச் சக்திகளை உருவாக்கிப் பயன்படுத்தி வரும் மக்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கவும் —

மாற்றீட்டு சக்திகளை உருவாக்கும் தனியாருக்கு மூலதன ஊக்குவிப்புகளை வழங்கி அத்தொழில் நுட்பத்தை விரிவுபடுத்தவும்—

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப்பகுதியினர் தீர்மானித்துள்ளனர்.

எனவே மேற்குறித்தவாறு மாற்றீட்டுச் சக்திப் பொறிகளைத் தயாரித்துப் பயன்படுத்துவோர் தங்கள் பகுதியில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன வட்டத் தொடர்பாளர் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படியும் கோரப்பட்டுள்ளனர்.

வருடாந்தம் நல்லூர்த் திருவிழாவின் போது நடைபெறும் கண்காட்சியில் மாவட்ட மட்டத்திலான 'பரிசு'த் திட்டத்தில் பங்கு பற்றும் வாய்ப்பையும் இவர்களுக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## இலங்கைக்கான ஜப்பானிய நன்கொடை உதவி குறைப்பு

கொழும்பு, ஜூலை 6

இலங்கைக்கு ஜப்பானிய அரசு வழங்கி வரும் நன்கொடை உதவிகள் குறைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனம், தென்ஆபிரிக்கா மற்றும் முன்னாள் சோவியத் குடியரசுகள் ஆகியவற்றுக்கு நிதி உதவிகளை ஜப்பான் வழங்க வேண்டியுள்ளது.

இதன் காரணமாகவே இலங்கைக்கான உதவி குறைக்கப்படவிருப்பதாக கொழும்பு வந்துள்ள ஜப்பானிய அரசுக் குழுவின்தலைவர் மனாட்டோ கிற்றெறா தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கையில் எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் ஜப்பானின் பொருளாதார உதவிகள் தடையின்றி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

